**OS.No.309/2024, Dated 25.06.2025**

The witness sworn under Oaths Act 1969 on this the 25th day of June 2025.

**வா.சா.1 - ஜெயந்தி க/பெ குருசாமி வரவழைக்கப்பட்டு 3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சொத்து உரிமை கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன். நானும் எனது சகோதரிகள் அனிதா மற்றும் வாசுகி ஆகியோர் தான் இவ்வழக்கிற்கான தகவல்களை வழக்கறிஞரிடம் கூறினோம். அனிதாவிற்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தால் நீதிமன்றத்திற்கு வந்ததில்லை. 1ம் பிரதிவாதி உஷாராணி எனது தாயார் ஆவார். 2ம் பிரதிவாதி ராஜசரவணன் எனது தம்பி ஆவார். எனக்கு திருமணம் ஆகி தாவா கிராமத்திற்கு வந்ததில்லையா என்றால் எப்போதாவது விசேஷங்களுக்கு வருவோம். அனிதாவும் வருவாரா என்றால் வருவார். அனிதா வருடம் ஒருமுறை விடுமுறை காலத்தில் வருவார். வாசுகி சாத்தமங்கலத்திலேயே தான் குடியிருக்கிறார். தாவா சொத்துகளின் சர்வே எண்கள் எனக்கு தெரியாது. எனக்கு படிக்க தெரியாது. அனிதாவும், வாசுகியும் படித்துள்ளார்களா என்றால் படித்துள்ளார்கள். அவர்களுக்கு இந்த விபரங்கள் தெரியுமா என்றால் தெரியும். சொத்துகளின் மொத்த விஸ்தீரனம் எவ்வளவு என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்திற்கு ஐக்குபந்தி எனக்கு தெரியுமா என்றால் எனக்கு அது சரியாக தெரியாது. தாவாவில் சொத்துகள் 2 ஷெட்யூலாக காட்டப்பட்டுள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அது எதனால் அவ்வாறு பிரித்து காட்டப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. எனக்கு 1999 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. எனக்கு ஒரு வருடம் முன்பு எனது அக்கா அனிதாவிற்கு திருமணம் நடைபெற்றது. வாசுகிக்கு 2, 3 வருடங்கள் கழித்து திருமணம் நடைபெற்றது. அனிதா 12 ஆம் வகுப்பு வரையிலும், வாசுகி 9ம் வகுப்பு

வரையிலும் படித்துள்ளார்கள். நான் 5ம் வகுப்புவரை படித்துள்ளேன். இவ்வழக்கில் 1,2 பிரதிவாதிகள் வழக்கறிஞர் மூலமாக ஆஜரான விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1,2 பிரதிவாதிகள் இவ்வழக்கற்கு பதில் தாக்கல் செய்துள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த பதிலில் அவர்கள் என்ன சொல்லியுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது. 1, 2 பிரதிவாதிகள் 3ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததாகவும், அதில் எங்களுக்கு பங்கு உள்ளதாகவும் நாங்கள் சொல்லியுள்ளதில் எவ்வளவு விஸ்தீரனம் கிரையம் கொடுக்கப்பட்டது என்றால் எனக்கு அது தெரியாது. தாவா சொத்துகள் எங்கள் குடும்பத்திற்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்றால் நாங்கள் அனைவரும் கூட்டு குடும்பமாக உழைத்து வாங்கிய சொத்தாகும். அந்த சொத்து எங்களது தாயார் பெயரில் கிரையம் வாங்கப்பட்ட சொத்தாகும். எந்த தேதியல் கிரையம் வாங்கப்பட்ட சொத்து என்று ஞாபகம் இல்லை. எவ்வளவு தொகைக்கு கிரையம் வாங்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த சொத்து தாயாரின் பெரியப்பா எட்டியான் என்பவரிடம் இருந்து கிரையம் வாங்கப்பட்டது. எட்டியான் எனது தாயாரின் பெரியப்பா ஆவார். அது அவருக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து தான். எட்டியானின் வாரிசுகள் அந்த கிரையப்பத்திரத்தில் கையெழுத்து போட்டார்களா என்று எனக்கு தெரியாது. எனக்கு தற்சமயம ் 42 வயதாகிறது. கிரையம ் வாங்கி எவ்வளவு வருடங்கள் இருக்கும் என்றால் எனக்கு தெரியாது. எனது கிரையம் வாங்கி 33 வருடங்கள் ஆகிறது என்றாலும், அப்போது எனக்கு 9 வயது தான் என்றாலும், அதனால் நானும் உழைத்து அந்த கிரையம் பெறப்படவில்லை என்றால் சரியல்ல. எட்டியானின் மகன் தான் 3ம் பிரதிவாதி பொன்னுசாமி என்றால் சரிதான். தாவா சொத்தை 3ம் பிரதிவாதி தான் கிரையம் வாங்கியுள்ளார் என்றால் அவர்

எப்படி வாங்கினார் என்று எனக்கு தெரியாது. எனது அப்பா எப்போது காலமானார் என்றால் எனக்கு சரியாக ஞாபகம் இல்லை சுமார் 15 வருடங்கள் இருக்கும். எனது தாயார் கிரையம் வாங்கிய பத்திரத்தை பார்த்துள்ளேன். அதில் எழுதப்பட்டுள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. எனது தாயார் கிரையம் வாங்கியபோது நான் உடன் செல்லவில்லை. அந்த கிரைய ஆவணத்தில் 3ம் பிரதிவாதி பொன்னுசாமி கையெழுத்து போட்டுள்ளாரா என்று எனக்கு தெரியாது. எனது தகப்பனார் எட்டியானின் சகோதரி அம்மனியம்மாளின் மகன் தான். எனது தாயார் எட்டியானின் உடன் பிறந்த சகோதரர் அய்யாவுவின் மகள் என்றால் சரிதான். எனது தகப்பனார் காலமான பின்னிட்டு நானும், எனது தாயாரும், உடன் பிறந்தவர்களும் தாவா சொத்தை கூட்டாக 5 வருடங்கள் அனுபவித்திருப்போம். சொத்து எனது தாயாரின் பேரில் கிரையம் வாங்கப்பட்டதா என்றால் எனது தாயார் பெயரில் உள்ளதா அல்லது தந்தையின் பெயரில் உள்ளதா என்று தெரியாது. எனது தந்தை காலமான பின்னிட்டு கூட்டு பட்டா கொடுக்கபட்டதா என்றால் கொடுக்கப்பட்டது. எந்த வருடம் கூட்டு பட்டா வாங்கினோம் என்று ஞாபகம் இல்லை. பட்டாவை தாக்கல் செய்துள்ளோமா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னா் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தாா்.

SARANYA S
Digitally signed by SARANYA S
Date: 2025.06.25 18:13:27 +0530

சாா்பு நீதிபதி,
வந்தவாசி

சாட்சியின் கையொப்பம்.